**செ.வெ.எண்: 44** **நாள்: 18.12.2025**

**பத்திரிக்கை செய்தி**

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட சமூகநல அலுவலகத்தில் செயல்பட்டு வரும், மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் காலியாக உள்ள இரண்டு கணினி இயக்குபவர்கள் பணியிடத்திற்கு முற்றிலும் தற்காலிகமாக மாதம் ரூ.20,000 ஒப்பந்த அடிப்படையில் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட உள்ளது.

எனவே, திருவாரூர் மாவட்டத்தில் வசிக்கும் தகுதிவாய்ந்த மகளிர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இப்பதவிகளுக்கான மாதிரி விண்ணப்பம் திருவாரூர் மாவட்ட இணையதளத்தில் https://tiruvarur.nic.in பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடம், தரைத்தளம், திருவாரூர் 610004 என்ற முகவரிக்கு பதிவஞ்சலில் 05.01.2026 க்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்குமாறு திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவாரூர் மாவட்டம்.**